உ

கடவுள் துணை

செந்தமிழ்

தொகுதி-௪௯.] விஜய-௵—புரட்டாசி-௴ [பகுதி-௧௧.

Vol. 49. September—October 1953 No. 11.

*பரிபாடலும் நகைச்சுவையும்

பேராசிரியர், திரு. எஸ். வையாபுரிப்பிள்ளை அவர்கள்,

திருவாங்கூர்ப் பல்கலைக்கழகம்.

I

பரிபாடல் இன்னதென்று தற்காலத்தில் அறிந்துகொள்ளுதல் மிக அருமை. அது ஒரு நூற்பெயரென்றுதான் பொதுப்படப் பலரும் அறிவார்கள்; ஒரு செய்யுள்வகை யென்று பலரும் அறிய மாட்டார்கள். தமிழில் வெண்பா, ஆசிரியம், கலி, வஞ்சி என்ற நால்வகைப் பாக்களே உண்டு. இந் நால்வகைப் பாக்களாலும் இயன்று, பலவகை அடிகளையும் பெற்று வருவது பரிபாடல். இப் பெயரே 'பரிந்து வரும் பாட்டு' என்று பொருள்படும். அதாவது பலவகைப் பாக்களில் இன்ன பாவென்று குறிப்பிடத்தக்க ஒருநிலையின்றி, எல்லாப் பாவிற்கும் அடிவகைகளுக்கும் பரிந்து இடங்கொடுக்கும் பாட்டு என்பது கருத்து. தொல்காப்பிய உரைகாரரான பேராசிரியரும், 'பரிபாடல் என்பது பரிந்து வருவது; அஃதாவது கலியுறுப்புப் போலாது பல அடியும் ஏற்று வருவது' என்று இச்செய்யுள் வகையை விளக்கினர். இங்கே, பரிதல் என்பதற்குக் 'குறிப்பிட்ட ஒரு நிலையின்றி நிகழ்தல்' என்று பொருள்படும். இதனால் இச் செய்யுள்வகை கலிப்பாவின் பின்-வளர்ச்சியே என்பது விளங்கும்.

* இதன் சுருக்கம் 23—2—53-ல் திருவனந்தபுரம் ரேடியோ நிலையத்திலிருந்து ஒலிபரப்பப்பட்டது.

இச் செய்யுள்வகை பெரும்பாலும் காமம் பற்றி வருவதாகும். இதனை இசைப்பாட்டு என்றும் கூறுவர் (பரிபாடல்-1, உரையிறுதி; தொல். செய். 242- பேராசிரியர்). ஒவ்வொரு செய்யுளின் இறுதியிலும், அதற்கு இசை வகுத்தவர் இன்னுரொன்பது குறிக்கப் பட்டுள்ளது. ஆனால், இச் செய்யுள்வகை காமமொழிந்த பிற பொருள்பற்றி வருமென்றேனும், இசைப்பாட்டு என்றேனும் தொல்காப்பியர் கூறவில்லை. இவர் 'காமங் கண்ணிய நிலைமைத் தாகும்' என்றே கூறியமைந்தனர் (தொல். செய். 121).

இவ்வகைச் செய்யுட்கள் அடங்கிய ஒருநூலைத்தான் தற்காலத்தில் பரிபாடல் எனக் கூறுகிறோம். இதில், திருமால்பற்றி 8-ம், முருகக் கடவுள்பற்றி 31-ம், காடுகிழாள் என்ற கொற்றவையைக் குறித்து ஒன்றும், வையையைக் குறித்து 26-ம், மதுரை பற்றி 4-ம் ஆக 70 செய்யுட்கள் உள்ளன என்று ஒரு பழைய வெண்பா தெரிவிக்கிறது. அவ் வெண்பா வருமாறு:

திருமாற் கிருநான்கு; செவ்வேட்கு முப்பத்
தொருபாட்டு; காடுகாட் கொன்று—மருவினிய
வையையிரு பத்தாறு; மாமதுரை நான்கென்ப
செய்யபரி பாடற் றிறம்.

வெகுகாலத்திற்கு முன்னரே இந்நூற் செய்யுட்கள் பலவாறு பிறழ்ந்து போயின.

மிகைபடு பொருளை நகைபடு புன்சொலில்
தந்திடை மடுத்த கந்திதன் பிழைப்பும்
எழுதினர் பிழைப்பும் எழுத்தரு வொக்கும்
பகுதியின் வந்த பாடகர் பிழைப்பும்
ஒருங்குடன் கிடந்த ஒவ்வாப் பாடம்

என உரைச் சிறப்புப்பாயிரம் இரங்கிக் கூறுகிறது. தற்போது, நமக்குக் கிடைத்துள்ளவை முதலிலிருந்து தொடர்ச்சியாகவுள்ள 23 பாடல்களும், உரைகளில் அகப்பட்ட 2 முழுப்பாடல்களும், ஒரு சில உறுப்புக்களுமேயாம். நூல் முழுதும் நமக்குக் கிடைக்கவில்லை.

11-ம் பரிபாடலிலுள்ள சோதிடக் குறிப்பு இந்நூல் கி. பி. 634-ன் பின் தோன்றியதாதலைக் காட்டுகிறது. இந்நூலின்கண் திருமாலிருஞ்சோலை, இருந்தையூர் முதலிய க்ஷேத்திரங்கள் கூறப்படுகின்றன. பிற்காலத்திற்குரிய சமயக்கொள்கைகளும் இதில் உள்ளன. பிருங்கலாதன் முதலியோரைப் பற்றிய பௌராணிக சரித்திரங்களும், சாபத்தால் அகலிகை கல்லுரு எய்திய வரலாறும் இதில் குறிக்கப்படுகின்றன. இங்ஙனம் கல்லுரு எய்தியதை, பூர்விக கவிகளில் காளிதாஸர் ஒருவரே தமது ரகுவம்சத்தில் கூறியிருக்கின்றனர். மல்லிகாமாலை, அமிர்தபானம், ஆராதனை, இரதிகாமன், அருச்சிப்போர், கவிதை, காருகப்புண்ணியவணிகர், குங்குமம், சலதாரி, சருமம், சுருங்கை, நாமம், மகரகுண்டலம், மகரவலயம், வச்சியம், (வசியம்) முதலிய வடமொழிச் சொற்களையும் தொடர்களையும் இந்நூல் எடுத்தாளுகின்றது. குங்குமம் என்பது கவனித்தற்குரியது. இது காச்மீரதேசத்தில் தோன்றியது; இதற்கு 'காச்மீரஜன்ம' என்ற பெயரும் அமரகோசத்தில் படிக்கப்பட்டுள்ளது; இதனையும் பூர்விக கவிகளுள் காளிதாசர் தந்துள்ளார். பல்வகைப்பட்ட காவிய மரபுகளும் இந்நூலகத்து உள்ளன. 'ஓசனை கமழும் வாசமேனியர்' என்பது உதாரணம். இது வடமொழியிலுள்ள 'யோஜனகந்தா' என்பதன் மொழிபெயர்ப்பு; 'கஸ்தூரி' என்று பொருள்படும். இனி, தமிழ்ச்சொற்களைக் கவனிப்போம். நான், கொடும்பாடு, மேம்பாடு, தேடி, தோழம், ஈதா, கில்லா, பாட்டியர், ஓட்டை, கோத்தை முதலிய பிற்காலத்தமிழ்ச்சொற்கள் இதில் வழங்கப்படுகின்றன. கிழவர், கிழவியர், தைப்பு, வார்த்தை முதலிய சொற்களின் பிற்காலப்பொருள்களும் இதில் வந்துள்ளன. அல்லால், சிறிதானும், மறுமுறையானும், கூறேல், வாரும் முதலிய பிற்கால வழக்குக்களும் இதில் ஆளப்படுகின்றன. அம்பாவாடல் முதலிய பிற்கால ஒழுகலாறுகளும் இதில் குறிக்கப்பட்டுள்ளன. இவ்வகையன்றி, சித்திரவேலைப்பாடு முதலியன மிகவும் அபிவிருத்தியான நிலையையும் இந்நூல் உணர்த்துகிறது. எழுத்துநிலை மண்டபத்தின் செய்தி இதனை வலியுறுத்தும். இங்குக் குறித்தவற்றையெல்லாம் நோக்குமிடத்து, சுமார் 8-ம் நூற்றாண்டளவில் இந்நூற் செய்யுட்கள் அமைந்தன என்பது புலப்படும். பிற்காலத்தவர் இதனைச் சங்கநூல் என்று கருதினர்.

II

இப் பரிபாடற் செய்யுட்கள் காமம்பற்றி வருமென்பதனால், இதிலே சிருங்காரம் எனப்படும் உவகைச் சுவையை எதிர்பார்க்கலாம். ஒருசில செய்யுட்கள் தெய்வங்கள் பற்றி வருவதால், பக்திச் சுவையும் உளதாகலாம். ஆனால், நகைச்சுவையை இச் செய்யுட்களில் நாம் எதிர்பார்க்க மாட்டோம்; உண்மையில் இச் சுவையைத் தெரிந்து கொள்வது சிறிது அருமைதான். எனினும், சிருங்காரச் சுவையுள்ள இடங்களில், நகைச்சுவையும் அடிப்படையில் அமைந்திருக்க இயைபு உண்டு. இரண்டு சுவைகளும் கலந்து தோன்றுகிற காட்சிகள் நமக்குப் பெருங்களிப்பை விளைவிக்குமல்லவா?

இச்செய்யுளில் பலவகை ஓசைகளும் புலப்படுகின்றன. இவ்வோசைகளும் நகைச்சுவையை விளக்கின்றன. இவற்றோடு பண்ணும் கலந்துவிட்டால், உண்டாகும் கலவையழகு மிகமிக மேம்பட்டு நகைச்சுவையின் பேரெல்லையைத் தொட்டுவிடுமல்லவா? இதனை உணர்ந்தவர்கள்போல, இசையாளர்கள் இதற்கு இசையும் வகுத்திருக்கிறார்கள்:

ஓடியா வுள்ளமொ டுருத்தொறுக் குடனியைத்
திடியெதிர் கழறுங் காலுறழ் பெழுந்தவர்
கொடியறு பிறுபு செவிசெவிடு படுபு
முடிக ளதிரப் படிநிலை தளர
நனிமுரல் வளை முடியழி பிழிபு
தலை யிறுபு தாளொடு புரள
நிலை தொலைபு வேர்துர் மடல் (II, 36.)

முதலிய அடிகளைப் பண்ணோடு பாடிவிட்டால், எத்தனை நகைப்பாக இருக்கும்! அறுபு இறுபு, படுபு என்பன போன்ற புகரவீற்று வினையெச்சங்கள் இப்பரிபாடலுக்கு ஒரு தனி நகைச்சுவையைத் தான் கொடுக்கின்றன!

பரிபாடலுக்கு உரியவையாகக் கருதப்பட்ட பொருள்களை, அப் பாடல்கள் விவரிக்கும் இடங்களிலும் நகைப்பும் மகிழ்ச்சியும்

மேன்மேலும் பெருகிக்கொண்டேயிருக்கின்றன. அப்பொருள்களைப் பற்றி,

மலையே யாறே ஊரென் றிவற்றின்
நிலைபெறு மாயின் நீங்கா தாகும்

என அகத்தியனார் கூறியுள்ளார் என்பர். இவைகளை வர்ணிக்கும் நெறியில், முக்கியமான அம்சத்தைப் பரிபாடல் மேற்கொண்டுள்ளது. நாடகத்தில் வரும் கதாநாயகனது காதல் விஷயங்களில், அந்தரங்க காரியதரிசி யொருவன் நின்று, அவனுக்குத் துணை புரிகின்றான். இவ்வாறு துணைபுரியுமிடத்திலும் அவன் பார்ப்போருக்கு நகைப்பு ஊட்டுகிறான். பரிபாடலும் காதல் விஷயங்கள் பற்றியதுதான். 'காமங்கண்ணிய நிலைமைத்தாகும்' என்பது அதன் இலக்கணம். அவற்றில் வரும் அந்தரங்கநிகழ்ச்சிகளைப் புலவனும் எல்லை மீறாது அடங்கி நின்று கூறிக் கற்போருக்கு நகைப்பு ஊட்டுகின்றான்.

ஆனால், இக்கலைவக் காட்சிகளை அனுபவிப்பது அவற்றை நேரில் நின்று பார்ப்பவர்களுக்கு மட்டுமே எளிதில் முடியும். காலத்தாலும் இடத்தாலும் வெகுதூரத்தேயுள்ள நமக்கு அவற்றைக் கண்டு கொள்ள, 'பாவனை' என்ற தூரதர்சினியின் உதவிவேண்டியதிருக்கிறது. இக்கருவியால் காட்சிகள் பலவும் நமது கண் முகப்பில் மிக அணுகி நிகழ்பவை போலத் தோன்றிவிடும். அவற்றிற்கு முன்னும் பின்னும் நிகழ்ந்தவற்றை எளிதில் ஊகித்துக்கொள்ளலாம்; அவற்றின் சூழ்நிலைகளை எளிதிற் கண்டுகொள்ளலாம்; குறிப்பு மாத்திரமாயுள்ள விஷயங்கள் மிகமிகத் தெளிவாய்ப் புலப்பட்டு விடும். காட்சிகளின் ஸம்பூர்ணமான தோற்றத்தைக் கண்டதும், நமது மனம் களிப்பினால் பொங்கியெழும். சில காட்சிகளால் நமது முகம் புன்னகை தவழ்ந்து நெகிழ்ந்து நிற்கும். வேறு சில காட்சிகளால் முகமானது கதுப்புநெகிழ்ந்து தாழ்ந்து, இதழ்மலர்ந்து, பற்கள் தோன்ற ஒளிவிட்டு இலகும். இன்னும் சில காட்சிகளால் விலாவெடிக்குமாறு ஆரவாரித்துக் குலுங்கக் குலுங்கச் சிரித்து விடுவோம்.

III

இனி, சுவைப்பு நிரம்பிய காட்சிகளில் ஒரு சிலவற்றை நோக்குவோம்.

வையை நதியைப்பற்றி நாம் அறிவோம். தற்காலத்தில் அதன் மணற்பரப்பிலே அங்கங்கே நீரோடைகள் செல்வதைப் பார்க்கிறோம். அதன் பரப்பு முழுவதும் நீர் நிரம்பிப் பார்ப்பது மிகமிக அரிதாகும். முன்காலத்தில் அப்படியல்ல. எப்பொழுதும் நீர்நிரம்பி இந்நதி பாய்ந்து சென்றது. 'வையை யென்னும் பொய்யாக் குலக்கொடி' என்று சிலப்பதிகாரம் கூறியுள்ளது. இந்நதி உற்பத்தியாகும் மலையில் பெருமழை பெய்துவிட்டால் கேட்கவும் வேண்டுமா? நதி இருகரையும் புரண்டு பெருகிவரும். வெள்ளப் பெருக்கானது, பலவகை மலரின் மணம், மரக்கொம்பிலிருந்து உதிர்ந்த கனிகளின் இனிய மணம், இன்னும் காய்ந்து கிடந்த பூமியிலே புதுமழையால் உண்டாம் நறியமணம் முதலியன கமழ, பேராரவாரத்துடன் பாய்ந்துவரும். நதிப்போக்கில் இரண்டு கரையிலுமுள்ள ஊர்களில் வெள்ளம் வருவதைத் தெரிவித்துப் பறையொலி கேட்கும். இவ்வொலியோடு, சலதாரைகளில் பெருக்குநீர் களகளவென்று ஒலித்தோடுகின்ற அரவமும், மக்களை உறக்கத்தினின்றும் எழுப்பிவிடும். அதி விடியற்காலை. ஆண், பெண் என்ற இருபாலாரும் வெள்ளப் பெருக்கைப் பார்ப்பதற்கும், அதில் நீராடிக் களிப்பதற்கும் ஒருவரினொருவர் முந்தி விரைந்து செல்லுகிற ஒரு காட்சி.

குதிரைவண்டியென்று எண்ணி, உறக்கமயக்கத்தால், குதிரைகளை மாட்டுவண்டியிற் பூட்டினர் சிலர். வேறுசிலர் மாட்டுவண்டியென்று எண்ணி, மாடுகளைக் குதிரைவண்டியிற் பூட்டினர். குதிரைக்குரிய சேணம் முதலியவற்றை யானைகளுக்கு அமைத்தனர் சிலர். யானைகளை அலங்கரிக்க எண்ணியவர்கள், அதற்கு நேரமில்லாததாலும் தாம் முந்திச் செல்லவேண்டும் என்ற நினைப்பினாலும், அவற்றை யாதோர் அலங்காரமுமின்றியும், தாம் உட்காருவதற்கேற்ற மெத்தையின்றியும் ஊர்ந்து செல்லலாயினர். பெண்களுக்குரிய மாலைவகைகளை ஆடவர் அணிந்தனர். இங்ஙனமே ஆடவர்களுக்குரிய மாலைவகைகளைப் பெண்கள் அணிந்தனர். இவ்வாறாக ஒருவர் முன்னால் ஒருவர் போகவேண்டுமென்று விரும்பிப் போட்டி

யிட்டுக் கலந்தடித்துக்கொண்டு விரைந்து சென்றனர் (பக். 147, வரி, 15—26).

ஒன்றோடொன்று ஒவ்வா இச்செயல்களும், இருபாலாரின் மயக்கவுணர்ச்சிகளும், விரைந்து செல்வதால் நேரிடும் தடுமாற்றமும் நாம் எண்ணிநோக்கிய அளவில் நமக்குப் பெருநகைப்பை உண்டு பண்ணுகின்றன. இக்காட்சியைத் தனியாக நேர்படநின்று நோக்கிக்கொண்டிருந்த ஒருவனுக்கு எவ்வளவு நகைப்பு உண்டாகும்?

வையைக் கரையில் வேறோரிடத்திற்குப் போவோம். இங்கே ஆண்களும் பெண்களும் நீராடிக்கொண்டிருப்பதைப் பார்க்கிறோம்.

திடீரென்று ஒரு சப்தம் கேட்டது. ஒருவன் வாழைத்தண்டினால் அமைத்த மிதப்புக் கருவியைப் பற்றிக்கொண்டு, சிறிது ஆழத்திற்போய், நீந்தி நீராடினான். அப்பொழுது அவன் காதலி தனது தாய், தோழிகளுடன், நீராடுவதற்காகச் சிறிது தள்ளி நின்றுகொண்டிருப்பதைக் கண்டான். கண்டதும், தனது நெஞ்சைப் பறிகொடுத்தான். மிதப்பிற் கைப்பிடி நெகிழ்ந்தது; நீர்ப்பெருக்கு அவனை இழுத்துச்செல்லத் தொடங்கிற்று. தன் காதலி நிற்குமிடத்தில் தங்கிக்கொள்ளலாமென்று கருதினான். ஆனால், பெருக்கின் வேகம் அவனை அவ்வாறு தங்கவிடவில்லை; மேலும் இழுத்துச்சென்றது. இதனைக்கண்டு, அவன் காதலி அவன் நின்று நீராடுமிடத்துக்குத் தானுஞ்சென்று நின்றுகொள்ளலாம் என்று நினைத்து, நீரிற்குதித்து அவனைப் பின் தொடர்ந்தாள். அவள் தாய் இதனை அறியாது, 'தனியாய் நீந்தி நீராடாதே தோழியருடன் சேர்ந்து நீரிலிறங்கி நீராடு' என்று கூக்குரலிட்டாள் (பக். 92, வரி, 106-114).

இந்தக் கூக்குரல்தான் நமது செவியில் தாக்கியது. மகளது நோக்கத்தையும் சூழ்ச்சியையும் அறியாது ரகசியக் காதலைப் பகிரங்கமாக்கிய தாயினது அறியாமையை நினைக்க நினைக்க நமக்குக் களிப்புப் பெருகுகிறது.

நதிக்கரையில் பிறிதோரிடத்திற்குச் செல்வோம். இங்கே ஒரு சிறு பூசல் நடந்துகொண்டிருக்கிறது.

ஒருவன் தன் மனைவியுடன் நீராடிக்கொண்டிருந்தான். அவன் கழுத்திலே அணிந்திருந்த மாலை, நீரில் மூழ்கிக் குளிக்கும்போது கழன்று நீரில் மிதந்து சென்றது. சென்று, சிறிது தூரத்தில் குளித்துக்கொண்டிருந்த வேறொருத்தியின் கூந்தலிற் சிக்கி, அதிலே சூட்டப் பெற்றதுபோற் கிடந்தது. இதனை மனைவி கண்டு, "இம் மாலை எனக்கு உரியது, என்னிடம் தந்துவிடு" என்று பூசலிட்டாள். மாலையைச் சூடியிருந்த கூந்தலழகி, "வையை நீரானது என்னிடம் இதனைக் கொண்டுவந்து சேர்த்து, எனக்கும் இதனோடு உற வுண்டு என்பதைத் தான் ஒற்றால் அறிந்துவைத்ததுபோல் இங்கே காட்டிக்கொடுத்துவிட்டது. இந்த மாலையை அது நோவும்படி உதிர்த்து எறிந்துவிட மாட்டேன். என்னிடமிருந்தால் இதன் அழகு போய்விடவா செய்யும்?" என்று பதில் கூறினாள். பின்பு, 'இந்த நதிக்கு எனது ரகசியம் தெரிந்துவிட்டது ஒரு வியப்புத் தான்!' என்று நகைத்தாள் (பக். 170, வரி, 34-60).

இந்த நகைப்பின் ஒலி நமது காதிற்படவே, அதன் காரண மாகிய பூசலைத் தெரிந்து, காதலியின் அமைதியும் மனைவியின் சினமும், கையும் மெய்யுமாய்ப் பிடிபட்ட கணவன் எங்கே பார்ப் பது என்று தெரியாது வெட்கி முகங்கவிழ்ந்து நிற்கும் நிலையும் எண்ணி, நமது மனம் உள்ளூர நகைக்கின்றது.

இனி, கரையின் வேறோர் பக்கத்திற்குப் போவோம். இங்கே ஓர் ஊடற் காட்சி வெளிப்பட நிகழ்கிறது.

ஒருத்தி ஊடற்கோபத்தோடு வையையில் இறங்கி நீராடினாள். கணவனும் உடனின்று நீராடினான். அவளது மனத்தின் வெப் பம் நீரின் குளிர்ச்சியாலும் தணிந்தபாடில்லை. பின், கணவன் உடன் தொடர்ந்துவரக் கரையேறி, ஈரத்தைத் துவர்த்தி உடை மாற்றியதும், அருகிலிருந்த மதுக்குப்பியை எடுத்துக் குளிர் மாறு வதற்காக மது அருந்தினாள். முற்காலத்தில் மதுவிலக்குப் பிர சாரம் இல்லையென்று தோன்றுகிறது! முன் சிறிது வெளுப்பாகி ஆம்பல் பூப்போன்றிருந்த அவள்கண் இப்போது நன்றாகச் சிவப் பேறி விட்டது. இக் கண்ணழகைக் கண்டு மோகித்து நின்ற கணவன் பற்பல காதற்பாட்டுக்களைப் பாடி, அவள் உள்ளத்தை நெகிழ்த்தி, ஊடலைத் தணிவிக்க முயன்றான். இப்படி அவன் பாடியது சிறிது தூரத்தே தள்ளி நின்றுகொண்டுதான், அருகில்

வந்தால், என்ன நேரிடும் என்று அவனுக்குத் தெரியும்! அவன் பக்கத்தில் நின்ற வேறொருத்தி இப் பாடல்கள் தன்னைக்குறித்தன என்றெண்ணி, அவனது அருகில் வர முயன்றாள். அவ்வளவில் கணவனது உடம்பெல்லாம் நடுங்கிற்று. தன் மனைவியே தனக்குத் தஞ்சமென்றுணர்ந்து அவளருகிற் சென்றான். அவள் இன்னும் அதிகமாகக் கோபிப்பாளென்று நினைத்தவுடன், உடம்பெல்லாம் கிடுகிடு என்று நடுநடுங்கி யாடத் தொடங்கியது. முன்னமேயே ஊடல் தீராத மனைவி இப்பொழுது மிகவும் சினந்தாள். அங்கே நின்ற பெண்கள் பலரும் பார்த்துக்கொண்டிருக்க, தன் மாற்றாளாகக் கருதியவளோடுள்ள பகையைத் தன் கணவன்மீது காட்டினாள். அவன் நிலத்தில் விழுந்து பணிந்தான். அப்பொழுதும் சினம் மாறாது ஊடினாள் (பக்-52. வரி, 61-76).

ஆண்-தன்மைக்கு மாறாகக் கணவனிடங்கண்ட ஏழைத் தன்மையும், பெண்-தன்மைக்கு மாறாக மனைவியிடம் கண்ட அதிகார தோரணையும், இடையில் நிகழ்ந்த காதற்பிழைபாடும், பலர்முன்பு நாணமின்றித் தன்கணவனை அவமதி செய்தும் அதனைச் சகித்து நின்ற அவனது பொறுமையும், நம்மை மெய்குலுங்கச் சிரிக்க வைக்கின்றன. கணவனது நடுக்கத்தை நினைக்குந்தோறும் நமது நகைப்பிற்கு எல்லையே யில்லாமற் போய்விடுகிறது.

நாம் வேறோர் இடத்திற்குச் செல்வோமானால், வேறு வகையாகவும் நகைப்புச் சுவை வெளிப்படுகிறது. அங்கே பெண்கள் கூட்டத்தைக் காணவில்லை; வேறு என்ன காண்கிறோம்? நீராடுதற்கு அதிகாலையில் வந்த அந்தணத் திருமேனிகள் நீராடாது நின்றனர். கைகால் சுத்தம் செய்வதற்கு வந்த வேறுசில அந்தணமூர்த்திகள் வையை நீரைத் தொடுதலும் செய்யாது நின்றனர். பல்விளக்க வந்த அந்தணர் சிலர், பல் விளக்கியும் வாய் கழுவாது நின்றனர். இவர்களனைவரும் வையைப் பெருக்கு நீரைப் பார்த்த வண்ணமாய் நின்றார்கள். நீராடாதவர் வையையில் நீரோடுகலந்து கள்ளும் வருகிறதென்று கருதினர்; ஈக்கள் மொய்த்தது இதற்குச் சான்றாயிற்று. நீரைத் தொடாதவர் வையையில் ஆடவரும் பெண்டிரும் அணிந்த வாசனைத் திரவியங்கள் கலந்து வருகின்றன என்று எண்ணினர்; நல்ல வாசனை இதற்குச் சான்று. வாய்

கழுவாதவர் வையையில் இனிய வாசனைத் தைலம் கலந்து வருகிறதென்று நினைத்தனர்; நீர் வழுவழுப்பாயிருந்தது இதற்குச் சான்று (பக். 171- வரி, 58-63).

வையைப் பெருக்கின் நறுமணத்தையும், அதில் மொய்த்திருக்கும் ஈக்கூட்டத்தையும், அதன் வழுவழுப்பையும் கண்டு, அந்தணர்கள் நீராடாது அஞ்சிநிற்கும் நிலை நமக்குப் பெருங் களிப்பை உண்டுபண்ணுகின்றது. இந்த அந்தணர்களுடைய தனிப்பட்ட பரிசுத்தத்தையும், அவர்கள் ஐயங்கொண்டு யாரேனும் ஒருவர் முந்தி இக் கருமங்களைச் செய்தால் பின் தாம் செய்யலாம் என்று எண்ணி நிற்கின்ற நிலையையும் பார்க்கின்ற நமக்கு அளவற்ற நகைப்பு விளைகிறது.

இவற்றையெல்லாம் பார்த்துக் களித்தநாம் வையை அணிசெய்யும் மதுரையை அடுத்துள்ள பரங்குன்றுக்குச் செல்வோம். அங்கே மலையின் மேல் ஒரு கூத்து நிகழ்கிறது. ஒருத்தி தன் கணவன் ஒலிக்கும் உடுக்கைக்கு ஏற்க ஆடமுயன்றாள். அவளது நெற்றியிலிருந்து கண்ணின் கடைவிழியோடு சேர்த்து அலங்கரித்த ஒரு பூமாலை, அவிழ்ந்து வீழ்ந்த அவளது கூந்தலோடு அசைந்து, ஆடியது. அவள் கண்கள் சிவந்து தோன்றின. கள்ளுண்ட மயக்கத்தால் அவள் தள்ளாடித் தள்ளாடி ஆடினாள். இடையிற் கட்டிய அவளது ஆடை சிறிது நெகிழ்வுற்றது. அவள் மார்பிலணிந்திருந்த முத்துமாலை ஒவ்வொருசமயம் ஒவ்வொரு புறமாக ஒதுங்கித்தொங்கியது. அவளது ஆடை அசைந்தது; அணிகலன்கள் அசைந்தன; அவளும் அசைந்து அசைந்து ஆடினாள் (பக்159. வரி. 57—63).

அறிவயர்ந்து, தன்வசமிழந்து பலவகை அலங்கோலங்களுடன் நிகழும் கூத்தும், இடையிடையே அறிவுவந்து பெண்மையியல்போடு பொருந்த ஆடவேண்டுமென்ற முயற்சியும் தம்முள் மாறுபட்டன. இதுவும் வேறொரு நகைப்புக் காட்சியாம்.

பரிபாடலில் ஒரு சில இடங்களில் அமைந்துள்ள நகைச்சுவையை உணர்தல் மிக அருமை. அதன் சுவையை ஊன்றியுணர்வது நமது நகைப்புச் சுவையை மிகுதிப் படுத்தும். நமது வாழ்க்கை இன்பத்தையும் பெருகச் செய்யும். இவ்வாறாக உள்ளன பரிபாடலிற் காணும் நகைப்புக் காட்சிகள்,

IV

பொதுப்படநோக்கினல், எங்கெல்லாம் பொருத்தமின்மை அல்லது முரண்பாடு (incongruities) காணப்படுகிறதோ, அங்கெல்லாம் நகைப்பு விளைதற்கு இடமுண்டு. இப்பொருத்தமின்மைகள் பலவாருக நிகழலாம். இருபொருள்படும் சொற்களும், மரபு தவறிய சொல்வழக்கும், தவருன உயர்சொல்வழக்கும், தவருன இழிசொல் வழக்கும், தவருன மொழிபெயர்ப்புக்களும் பொருத்தமின்மையால் நகைப்பின் நிலைக்களமாய் அமைகின்றன. இங்ஙனமே பரிஹாச உரையாடல்கள், வர்ணனைகள் முதலியனவும் நகைப்பின் காரணங்களாகும். பரிஹாசக் கவிதைகள் (Parodies) பற்றியும் நகைச்சுவை சிறந்து விளங்குவதுண்டு. பாரதியின் குயிற்பாட்டு இதற்குச் சிறந்த ஓர் உதாரணம். இவையெல்லாம் படிப்படியாய் உயர்ந்த தரத்தன. இதற்கு மேற்பட்ட தரத்தில், நிகழ்ச்சிகளின் பொருத்தமின்மையால் நகைச்சுவை விளையும். பரிபாடலில் ஏகதேசமாகக் காணும் நகைச்சுவை இந்த இனத்தைச் சார்ந்ததே. இதனினும் மேம்பட்டது குணத்தால் விளையும் நகைச்சுவையாம் (Humour of Charactor). எல்லாவற்றினும் மேம்பட்டது மக்கள் வாழ்விலே அமைந்து கிடக்கும் பொருத்தமின்மைகளை உள்ளூர உணர்தலால் புலப்படும் நகைச்சுவையாம். இந்த நகைச்சுவை மனிதனது பெருமிதத்திற்குத் தக்க மாற்றுமருந்து. அடிப்படையில் சிரியவுள்ளத்தோடு உண்மைகளை யுணர்ந்து, வெளிப்படையில் பரிகாச மனப்பான்மையோடு அவற்றைக் கருதிநோக்குவதுதான் நகைச்சுவையென்று ஓர் ஆங்கில அறிஞர் இலக்கணம் வகுத்தார் (Thinking in fun while feeling in earnest). இது மிகவும் உண்மையாம்.

நகைப்புச் சுவையைத் தரந்தரமாய்ப் பிரித்தலும், அதற்கு நுட்பமாய் ஆராய்ந்து இலக்கணம் அமைத்தலும் எல்லாவற்றைக் காட்டிலும் நமக்குப் பெரு நகைப்பு விளைக்கிற தல்லவா?

உ

சங்ககால மன்னர்கள்

வித்துவான், திரு. கு. குமாரஸ்வாமி ஆச்சாரிஅவர்கள், M.A. விரிவுரையாளர்,
தமிழ்க்கல்லூரி, மயிலம்.

(210-ம் பக்கத் தொடர்ச்சி)

சோழமரபினர்

சோழன், இலக்கியங்களில் கிள்ளி, சென்னி, செம்பியன், வளவன் எனவும் குறிக்கப்படுகின்றான். சோழன் என்னும் பெயர்க் காரணம் புலப்படவில்லை. பிறமொழிகளில் இச்சொல், சோன, சோட, சோர என அவ்வம்மொழி யமைதியின்படி குறிக்கப்படுகின்றது. எனினும், சோள, சோர என்னும் சொற்களுக்குக் கூறும் பெயர்க்காரணம் சோழன் என்னும் சொற்குரிய பொருளாமா? என்பது ஆய்வுக்குரியது. கேரளம் என்னும் சொல் சேரலம் என்றாயது போலக் கோலர் என்னும் சொல்லே சோழர் என்றாயிற்று எனக் குறிப்பதும் உண்டு.

இம்மரபினர் காடுகெடுத்து நாடாக்கி, நிலத்தைப் பண்படுத்தி உழவுத்தொழிலால் நாடு வளம்பெறச் செய்தவர்களாதலால் கிள்ளி எனப்பட்டனர். சிபியினது மரபில் வந்தவராதலால் செம்பியர் எனப்பட்டனர்; சிறந்த அரசியல் முறையொடு வலம்படு வென்றியு முடையராதலால் சென்னி எனப்பட்டனர் போலும். வளம்பல மலிந்த நாட்டினர் ஆதலின் இவர்கள் வளவர் எனப்பட்டனர்.

இரு வெள்ளாறுகளுக்கு மிடைப்பட்டதாகிய இவரது நாட்டினை வளம்படுத்துவது, பொன் கொழிக்கும்படி செய்வது, வான் பொய்ப்பினும் தான் பொய்யாக் காவிரியாறு. இவருடைய தலைநகரங்களாக உறையூரும் காவிரிப்பூம்பட்டினமும் விளங்கின. இவரது இலாஞ்சனை புலி. புத்தஜாதகக் கதைகளுள் ஒன்று சிபி ஜாதகம். ஆதலின் சிபியினது மரபில் தோன்றிய இவரது தொன்மை உணரப்படும். இவர்கள் ஞாயிற்றின் வழிவந்தவர் எனப்படுவர்.

போரவைக் கோப் பெருநற்கிள்ளி

இம் மன்னன், சாத்தந்தையார், நக்கண்ணையார் ஆகிய இரு புலவர்களாலும் புகழப்பட்டவன் (புறம் 80-85). உறந்தை தித்தனுக்கு உரியதெனச் சங்கச் செய்யுட்கள் கூறுகின்றன. உறந்தை தித்தனுக்கே யுரியதா? இவனுக்குரியதா? என அறிதற் கியலவில்லை. இவன் தித்தனோடு பொருது தோல்வியுற்றான். இவன் முக்காவனாட்டு ஆமூர்மல்லனைப் பொருது கொன்றனன். இம்மல்லனோடு இம்மன்னன் விரைந்து போர்செய்தான் என்பதைப் புறம் 82-ம் செய்யுள் குறிக்கின்றது. இவனது வெற்றிச் சிறப்பைக் கண்டு காதல்கொண்டதாகப் பெருங்கோழிநாய்கன் மகள் நக்கண்ணையார் கைக்கிளைத்துறை யமைந்த செய்யுட்களால் இவனைப் புகழ்ந்துள்ளார்.

இவனோடு போரிட்ட தித்தன் இவன் தந்தையே என்பர் திரு. மா. இராஜமாணிக்கம்பிள்ளையவர்கள். இத் தித்தன், 'வெளியன் தித்தன்' எனவும் 'வெளியன் வேண்மான் தித்தன்' எனவும் குறிக்கப்படுதலால் வேளிர்மரபினைச் சார்ந்தவனாதல் வேண்டும்; சோழ மரபினனாகான். இவன் காலத்து உறந்தை மதிலரணும் காட்டரணும் உடையதாக இருந்தது. இத் தித்தனுடன் கட்டி என்பான் ஒருவன் பாணமன்னன் ஒருவனைத் துணையாகக் கொண்டு போர் புரிய வந்தான். தித்தனது அவைக்களத்து ஒலித்த கிணையோசை கேட்டு அச்சமுற்று ஓடிவிட்டனர் அவ்விருவரும். தித்தன் சிறந்த புலவன்.

ஆய் அண்டிரன், நன்னன் ஆகியவர்கள் இப்பெருநற்கிள்ளியின் காலத்தவராகவோ, இவனுக்கு அண்மையான காலத்தவராகவோ இருத்தல் வேண்டும் (அகம் 152). ஆதலின், ஆய் அண்டிரனைப் பாடிய முடமோசியாரால் குறிக்கப்பட்ட முடித்தலைக்கோப் பெருநற்கிள்ளியே யாதல்வேண்டும் இப் பெருநற்கிள்ளி. இக் கிள்ளியை வேற்பஃறடக்கைப் பெருவிறற்கிள்ளி என்பார் சிலர்.

முடித்தலைக்கோப் பெருநற்கிள்ளி, அந்துவஞ்சேரலிரும்பொறை மீது பகைகொண்டு கருவூரை முற்றுகையிட்டான். அப்பொழுது கருவூரில் சேரமானோடிருந்த உறையூர் ஏணிச்சேரி முடமோசியார், நகருள் யானையூர்ந்துவந்த பெருநற்கிள்ளியைக்கண்ட சேரமன்னனது சினத்தைத் தணிவித்தார் (புறம் 13).

கரிகால்வளவன் I

இவன் சென்னிமாபினனாதல் வேண்டும். இவன் எக்காரணம் பற்றியோ சேரமன்னனான பெருஞ்சேரலாதன் என்பவனுடன் வெண்ணிப் பறந்தலையில் போர் செய்தான். போரில் இவன் எய்த அம்பு சேரலாதனது மார்பைத் துளைத்து ஊடுருவி முதுகினின்றும் வெளிப்பட்டது. அம்முதுகிற்பட்ட புண்ணைப் புறப்புண்ணாகும் என்று நாணிச் சேரன் தன் கையிற் பிடித்த வாளுடன் வடக்கிருந்து பட்டினிகிடந்து உயிர் துறந்தனன். வடக்கிருந்தானைக் கழாத்தலையார் என்ற புலவர் பாடித் தம் துயரத்தை விளக்கியுள்ளார். வென்றிகொண்ட கரிகால்வளவனை வெண்ணிக் குயத்தியார் என்னும் புலவர் பாராட்டிப் பாடியுள்ளார் (புறம் 65, 66).

வேற்பஃறடக்கைப் பெருவிறற்கிள்ளி

இவன் குடக்கோ நெடுஞ்சேரலாதனுடன் போர்புரிந்து இறந்தவன். இவ் விருவேந்தரும் போர்க்களத்தில் இறந்தமைகண்டு கழாத்தலையாரும் பரணரும் பெரிதும் வருந்தினர் (புறம் 62, 63).

இளஞ்சேட் சென்னி

இவன் 'உருவப்பஃறேர் இளஞ்சேட்சென்னி' எனவும், 'நெய்தலங்கானல் இளஞ்சேட் சென்னி' எனவும், 'செருப்பாழி யெறிந்த இளஞ்சேட் சென்னி' எனவும், 'சேரமான் பாமுளூரெறிந்த நெய்தலங்கானல் இளஞ்சேட்சென்னி' எனவும் குறிக்கப்படுகின்றான். இவன் மிக்க வீரமும் கொடையுமுடையோன்; இரப்போரைப் பாதுகாத்தலையே விரதமாக உடையவன்; அரசர்களுக்கு இன்றியமையாத குணங்கள் பலவும் நிறைந்தவன். சேரமானுக்குரிய பாமுளூரை வென்று கைக்கொண்டான். இவன், தன் நாட்டினுள் நுழைந்த கோசரை எதிர்த்து வாகை புனைந்தனன். அவர்களை முற்றிலும் முரியடிக்க, பாழிநகர்வரை தொடர்ந்துசென்று, அவர்கள் தங்கியிருந்த அரண்களை யெறிந்து, அக்கோசர்களைத் தலையறத் தழித்தான் (அகம் 205, 375, 378, புறம் 378). இவன் இளையோன் எனவும் வழங்கப்படுவான். இவனைப் பாடிய புலவர்கள் ஊன்பொதி பசுங்குடையார், பரணர், பெருங்குன்றூர்கிழார் ஆவர்.

செம்பியன்

இம் மன்னன் வானத்தில் அசைந்துகொண்டிருந்த பகைவரது மதிலை அழித்து வீரவளை யணிந்தவன்; ஆதலின் இவன் 'தூங்கெயி லெறிந்த தொடித்தோட் செம்பியன்' எனப் பெயர் பெற்றான். இவனை நினைவூட்டிச் சோழர்கட்கு வீரவுணர்ச்சியூட்டல் அக்காலப் புலவர் மரபாகும் (புறம் 39). இவன் குட்டுவனது அகப்பாவை அழித்தனன் என மாமூலனார் கூறுகின்றார். அக்குட்டுவன் பல் யானைச் செல்கெழு குட்டுவன் என்பது பதிற்றுப்பத்து இரண்டாம் பத்தால் அறியப்படும். அகப்பாவைச் செம்பியன் அழித்தான் என மாமூலனாரும் குட்டுவன் அழித்தான் எனப் பாலைக்கௌதம னாரும் குறிப்பதால், அகப்பா யாருக்குரியதென அறிதற் கியல வில்லை. தூங்கெயிலெறிந்த சோழன் அகப்பா எறிந்தானுக்கு நெடு நாள் முற்பட்டவன் எனவும் கூறுவர்.

கரிகாலன் II

இவன் இளஞ்சேட்சென்னியின் மகன் (பொருந). இவன் தாய் அழுந்தூர் வேள் மகளாராவர் (தொல்.அக 30 உரை). இக் கரிகாலன் பதினொரு வேளிரையும் அவரொடு வந்து மலைந்த வேந் தரையும் வெண்ணிவாயில் என்றவிடத்திற் பொருது வென்றான் (அகம் 246). வாகைப்பறந்தலையில் அரசர் ஒன்பதின்மரைப் போரில் புறங்காட்டி ஓடச் செய்தான் (அகம் 125). பொருநராற் றுப்படை இருபெருவேந்தரொடு மலைந்தனன் எனக் கூறுகிறது, பதினொருவேளிரொடு பொருத செய்தியைக் குறிக்கவில்லை; ஆத லின் அகநானூற்றுப் பாக்கள் குறிக்கின்ற வெண்ணிப்போரையும் வாகைப்போரையும் புரிந்தவன் முதற்கரிகாலனே யாதல்வேண்டும் எனக் கருத இடனுண்டு. இக்கரிகாலனைப் பரணர், நக்கீரர் முத லிய புலவர்கள் பாடியுள்ளனர்.

[தொடரும்]

கம்பரும் துளஸிதாஸரும்-௪.

திரு. தி. சேஷாத்திரி அவர்கள், M. A., ஆசிரியர், மதுரைக்கல்லூரி.

ஏறத்தாழ மூன்று மாதங்களுக்கு முன் நிறுத்த நேர்ந்த இனிய பணியை இன்று மீண்டும் தொடர வாய்ப்புக் கிட்டியுள்ளது. தொடங்கு முன் ஒரு செய்தி. அதற்கு முன் ஒரு வேண்டுகோள். ஆராய்ச்சிக்கட்டுரையில் இவ்வித இடைப் பேச்சுக்கள்—இடைமறிப்பு—இடையூறாகவே கருதப்படும். எனினும் மனம் அடங்க மறுக்கின்றது. அன்பர்கள் மன்னிக்க. இனிச் செய்தி இதுதான்:

வடக்கே வார்தா, ஜபல்பூர், ஆக்ரா, தில்லி, அலஹாபாத் (பிரயாகை) காசி, கல்கத்தா முதலிய நகரங்களுக்குச் சென்றிருந்தேன். ஹிந்தி-தமிழுக்காக ஏற்றுக்கொண்ட இலக்கிய யாத்திரையாகும் அது. அங்கங்கே தமிழ்மொழியின் சிறப்பைப்பற்றியும், அம் மொழியின் இலக்கியக் களஞ்சியத்தின் மங்கா மணிகளைப் பற்றியும் இயன்றவரை ஹிந்தியில் எடுத்து உரைத்தேன். சிறப்பாகக் கம்பரையும் வள்ளுவரையும் பற்றிப் பேசினேன்.

ஆக்ராவில் நடக்கும் அமர் உஜாலா என்ற செய்தித்தாள் என் பேச்சை இவ்விதம் எடுத்துப்பரப்பிற்று. 'காவிய காலத்தில் மஹாகவி கம்பர் இயற்றிய இராமாயணம் ஒப்புயர்வற்ற இலக்கியப் பொக்கிஷம். இது இராமசரிதம் பற்றி எழுந்த பொருள்செறிந்த பன்னீராயிரத்துக் கதிகமான பாக்களின் தொகுதியானதோர் பனுவல். இதில் கவியின் கற்பனைப் புள் மிகமிக மேலே ஏறிப் பறந்துள்ளது. சேஷாத்திரி அவர்கள் கம்பர் நூலையும் துளஸிதாஸர் எழுதிய இராமசரிதமானஸத்தையும் ஒப்பிட்டுப் பேசிய...திலிருந்து அவர் ஹிந்தி இலக்கியம் இவைகளையும் எவ்வளவு ஆழ்ந்து படித்திருக்கிறார் என்று தெரிகிறது'.

பூவுடன் சேர்ந்து நாரும் மணம்பெற்ற கதையாகக் கம்பரும் துளஸியும் தந்த இந்தப் புகழங்கியைத் தகுதியின்மைபற்றி எழுந்த வெட்கம் அணியத் தடைசெய்த போதிலும், மீண்டும் எழுந்த ஆவலாலும் அவ்விரு தெய்வக்கவிகளின் வரப்ரஸாத மென்ற நினைவாலும், செய்தித்தாள் எழுதியதில் என்னைக் குறித்துள்ள பகுதியையும் சேர்த்து எழுதிவிட்டேன்,

அலஹாபாத் என்ற பிரயாகையில் நடந்து வரும் லீடர் (Leader) அம்ருத பஜார் பத்திரிகை (Amrit Bazaar Patrika) என்ற இரு ஆங்கிலப் பத்திரிகைகளும்; பாரத், அம்ருதபத்ரிகா என்ற இரு ஹிந்திச் செய்தித்தாள்களும் நான் ஆற்றின மூன்று சொற்பொழிவுகளையும் நன்கு பரப்பின. அவைகளில் வெளியானதன் சுருக்கம் இது:

"மதுரைக் கல்லூரிப் பேராசிரியர் .... கம்பர் இராமாயணத்தையும் துளஸியின் இராமசரிதமானஸத்தையும் ஒப்பிட்டு ஒரு சிறந்த, தெளிந்த, அறிவு நிறைந்த சொற்பொழிவாற்றினார் ... . அவர் சொன்னார் ... .

"இரண்டு மஹாகவிகளும் வெவ்வேறு காலங்களில் பிறந்தவர்களாக இருந்த போதிலும் இருவர் எழுதிய நூல்களிலும் பல ஒற்றுமைகள் மலிந்து காண்கின்றன. கம்பர் நூலைத் துளஸி அறிந்திருப்பாரா? என்ற கேள்விக்குத் தெளிவான முடிவுவிடை தர, இன்னும் நன்கு ஆழ்ந்து ஆராய்ச்சி செய்தல் வேண்டும் ....

"கம்பர் வான்மீகி முனிவரை அடியொற்றித் தன் இராமாவதாரத்தை இயற்றியதாகக் கூறிய போதிலும், அது முற்றிலும் மொழி பெயர்ப்பாகாது தனிச் சிறப்புக்கள் கொண்டு விளங்கும் ஓர் சீரிய காப்பிய நூலாகும் ....

மறுநாள் (அதாவது மேமீ 29ம்) நாள் லீடர், பாரத் என்ற பத்திரிகைகள் நடக்கும் இடத்துக்கு அழைக்கப்பட்டுச் சென்றேன். பாரத் செய்தித் தாளின் ஆசிரியர் குழுவில் உள்ள ஒருவர் என்னைக் கண்டவுடன், "நீங்கள் நேற்றுச் சொன்னவைகளிலிருந்து துளஸிதாஸர் கம்பர் நூலைக் கேட்டிருக்க வேண்டும் என்று ஐயமின்றிக் கொள்ளலாம் எனத் தோன்றுகிறது" என்றார். நான் அடித்துப் பேச அஞ்சுகிறேன். என்ன அவசரம்? தேவை தான் என்ன? இஃது இவ்வாறாக, நாம் மேலே தொடரலாம்.

நம் ஆராய்ச்சியைத் தொடங்குமுன் பாயிரம் தேவையாகிவிட்டது.

மீண்டும் பாலகாண்டத்துக்கு வந்து விட்டோம். அதற்குக் காரணம் இலக்கிய ஆராய்ச்சி வகையில் இந்தக்கட்டுரைத் தொடரை நீட்ட

முற்பட்டதேயாகும். ஏதோ ஒரு முடிவை நிலைநாட்ட மேலும் சில கருத்துக்களை எடுத்து ஒத்திட்டுக் கட்டுரைத் தொடரை முடிக்கலாம் என்று எண்ணி, ஆரணியகாண்டத்தில் ஒரு கருத்தொற்றுமையையும், யுத்தகாண்டத்தில் ஒருஒற்றுமையையும் தேடிஎடுத்து வைத்திருந்தேன். ஆனால் செந்தமிழ் ஆசிரியர் அவர்கள், மஹாமஹோபாத்தியாய பண்டித மணி அவர்களின் பெயரைச் சொல்லி, ஏற்கெனவே வலுவுள்ள தம் சொல்லுசுகு மேலும் ஓர் ஆக்கம் தந்து, என்னைத் 'தொடர்க' என்று ஆணையிட்டு விட்டார். தவிர, ஒரு கவியின் ஒரு கருத்தை மற்றொரு கவி அதே கதையைச் சொல்லும் போது தான் எடுத்தாளவேண்டும் என்பதில்லை. ஆகவே காண்டங்களை வரிசையாகத்தொடர்வது என்ப தும் இயலாத ஒன்றே. எனவேதான் மீண்டும் பாலகாண்டத்தை ஆராய ஆரம்பித்தது மட்டுமன்றி அங்கும் இங்கும் சுற்றநேர்ந்தாலும் நேரலாம் என்று எச்சரிக்க விரும்பினேன். அது நிற்க.

ஒரே கருத்தை இரண்டு கவிகளிடம் கண்டால், அந்தக் கருத்து அப்படியேயும் காணப்படலாம்; அல்லது ஒரு கருத்துக்கு முன் பின் தொடர்புள்ள கருத்தையும் சொல்லி நயம் ஊட்டப்பட்டிருக்கலாம். உதாரணமாக "குமரர்தமை யிருகண்ணின் முகத்தழகு பருக நோக்கி" என்றார் கம்பர். குமரகுருபரசுவாமிகள் அதே கருத்தை, 'உனது முகத்தினழகெம் வடிக்கண்ணுன் மொண்டுண்டனம்" என்றார். முற்றி லும் அதே கருத்து. சொல்லாட்சி மாற்றம்தான்; கருத்தாட்சியில் ஒன்றும் மாறுதல் இல்லை.

இந்தக் கருத்தைப் பாருங்கள்: 'கண்வழி நுழையும் ஓர் கள்வனே கொலாம்' என்ற ஒரு கருத்து கம்பருடையது. அதையே குமரகுருபா ரும் எடுத்துப் பேசுகிறார். கண்வழி நுழைந்த கள்வன் என்ன ஆனான் என்று சொல்வது கருத்தின்கதைப் போக்கில் அடுத்தபடி. குமரகுரு பரர் "கண்புகுந்து என் கருத்துளிருக்கவும்" என்று சொல்லிய போதில் தொடர்ந்து அடுத்த கருத்தை வெளியிட்டார். அதேபோல் ஒரு கவியின் ஒரு கருத்தையே அடிப்படையில் வைத்து மற்றவர் கற்பனையும் கவித் திறனும் கொண்ட ஒரு கட்டடமும் கட்டிவிடலாமல்லவா? இந்த முறை களைக் கருத்தில் இருத்தி, மேலும் சில ஒற்றுமைகளை ஈண்டுக் காண் போம்.

அணங்கு வந்தாள்

ஒரு பெண் தொலைவில் இருந்து வரும்போது ஆண்கள் எவ்வாறு அறிந்துகொள்ளலாம்? கம்பர் இந்தக் கேள்விக்குப் பதிலை, சூர்ப்பனகைப் படலத்தில் சொல்லுகிறார்.

நூபுரமும் மேகலையும் நூலும் ...
... இவை பூசலிடு மோசை
தாமுரைசெய் கின்றதொரு தையல்வரு மென்னக்
கோமகனு மத்திசை குறித்தனன் விழித்தான்
(சூர்ப்பனகைப்படலம்—34)

இழைகளின் ஓசை பெண் வருகிறாள் என்று தெரிவிக்கிறது. அரசன் மகன் அந்தத் திசையைக் குறித்தான் விழித்தான். தியாகராஜரை இந்தக் கருத்துத்தொடரில் உள்ள மந்திரசக்தி தன்வசப்படுத்திற்று. அவர் இந்தத்தொடரை அப்படியே இழுத்துச்சென்று சீதை வருமிடத்தில் கொண்டு நிறுத்தினார். அதனுடன் மற்றொரு கருத்தையும் பிணைத்து அழகுக்கு உண்மையிலேயே அழகு செய்தார்.

கட்டம்: இராமன் இளையவனுடன் மலர் வனம் ஏக, அங்கே சீதை தன் தோழிகளுடன் வந்த இடம். தோழியின் மொழிகளாகிய கள்ளில் மயங்கி, சீதை அரசகுமாரனைக்காண வருகிறாள். அவள் வரும் போது,

கங்கண கிங்கிணி நூபுர துனி சுனி
... பிர சிதயே தேஹி ஓரா

நூபுரமும் மேகலையும் வளைகளும் செய்யும் ஓசை கேட்டு .... அத் திசை (குறித்தனன்) விழித்தனன், என்பதுதான் இந்த ஹிந்தி வாக்கியத்தின் பொருள். இடையிலே உள்ள ஒருபகுதியை விட்டிருக்கிறேன், தியாகராஜரில் கம்பர் கருத்தை எவ்விதம் காணலாம் என்று காட்ட இனி இடைப்பகுதியையும் கேளுங்கள்:

கஹத லக்ஷ்ன ஸன ராம ஹ்ருதய குனி
மானஹூம் மதன துந்துபி தீனீ(ம்)
மனஸா விசுவ விஜய கஹம் கீனீ(ம்)

இராமன் மனத்தில் எண்ணித் தம்பியிடம் சொன்னான், "உலகை வெற்றிகொள்ள மனத்தில் எண்ணிய காமதேவன் பறை அடிக்கிறான் போலும்!" என்று.

துளஸி இந்தக் கருத்தை இந்தக் கட்டத்துக்குக் கொண்டுவந்த தன் மர்மம் விளங்கிற்றல்லவா? கம்பரே வாய்ப்பு ஏற்பட்டு இருந்தால் அப்படித்தான் செய்திருப்பார். ஆனால் சூர்ப்பநகை இராமன் விஷயத்தில் அப்படித் திறந்து சொல்லுதல் ஒவ்வாது. அவர் எழுதிய கதையிலோ இராமன் நடந்து வருகிறான், சீதையைக் காண; சீதை இராமனைக் காண நடந்து வருகிறாள் இல்லை. அப்படி ஒரு வாய்ப்பு இருந்தால் மணமாகாத பருவமங்கையின் அணியோசையை மதனன்பறை என்று சொல்லாமல் விட்டிருப்பாரா? துளஸிக்கு அடித்தது யோகம்!

சொந்தச்சோத்து

ஒருவன் வெகுநாளாகப் பிரிந்திருந்த உடைமையை அடைந்தால் என்ன செய்வான்? அப்படியே வாரி எடுப்பான்; அவ்வளவு தானா? அணைத்துக்கொள்வான். அவ்வளவு தானா? முடிந்தால் விழுங்கிவிட மாட்டானா? அதனால் தானே "கடித்துத் தின்றுவிடுவான்போலிருக்கிறதே" என்று உலகவழக்கும் நிகழ்கிறது. ஆர்வம் கொண்ட, ஆவல் வெறி கொண்ட பார்வையை, விழுங்கும் பார்வை என்று தானே சொல்லி மனத்தைத் திருப்தி செய்து கொள்ள வேண்டியிருக்கிறது?

கம்பர் சொன்னார் 'கண்ணொடு கண்ணிணை கவ்வி...உண்ணவும்' என்று (மிதிலைக்காட்சிப்படலம்—35). இராமன் கண்கள் சீதையின் கண்களைக் 'கண்டன. உடனே கவ்வி உண்ணத் தொடங்குவானேன்? அதற்குப் பதில், அதாவது இதற்கு முந்திய தொடர்ந்த கருத்து, 'கண்கள் வெகுநாளாகத் தேடிய தம் உடைமையைக்கண்டன' என்பது தான். அதைத் துளஸி சொன்னார்:

> தேகி ரூப லோசன லலசானே
> ஹர்ஷே ஜனுநிஜ நிதி பஹிசானே

உருவத்தைக் கண்டு கண்கள் பேராவல் கொண்டன. உரிய உடைமையைக் கண்டதுபோல் அகன்றன. 'லலசானு' என்ற பதத்துக்கு, பேராவல் கொள்ளுதல் என்று பொருள். 'ஹர்ஷே' என்பதற்கு மலர்ந்தன என்று அர்த்தம்.

உண்ணவு நிலை பெறுது

பசித்தவன், உணவு தேடுபவன், உணவைக் கண்டாலே விட மாட்டான். தனக்கு என்று உரிமையும் பெற்றுவிட்டால்? வாரி விழுங்கவேண்டியதுதான்! இங்கே சாதாரணப் பசியா கண்களுக்கு? அல்லது கண்ட உணவுதான் சாதாரண உணவா? கவ்வி உண்ண ஆரம்பித்ததில் என்ன வியப்பு? ஆனால் உண்ண முடியுமா? ஆகவே தான் நிலைபெறுது களைத்து நின்றன கண்கள்.

தகே நயன ரகுபதி சவி தேகி
பலக ஹைம் பரிஹரிய் நிமேகி

கண்கள் களைத்தன, இரகுநாதன் அழகைக்கண்டு அல்ல, உண்டு. கண்ணிமைகள் மூட மறந்தன. ஆகவே "அண்ணலும் நோக்கினன் அவளும் நோக்கினள்!"

கண்வழி நுழைந்த கள்வன்

இப்படிப் பருக நோக்கியதன் விளைவு என்ன ஆயிற்று? கம்ப நாடர் சொல்லி விட்டார்: "வரிசிலை யண்ணலும் வாட்க ணங்கையும் இருவரும் மாறிப்புக் கிதயம் எய்தினர்" என்று. பார்த்திருக்கும் போதே நடந்ததுதானே இது! சீதை சொல்கிறாள்:

மண்வழி நடந்து அடி வருந்தப் போனவன்
கண்வழி நுழையு மோர் கள்வனே கொலாம்—மிதிலை 55.

இது அநியாயம் தானே! சீதைக்குக் கள்வன் என்று சொல்ல என்ன உரிமை இருக்கிறது? பார்த்திருக்கும் போதே, சீதை தன் கண்கள் காமும் விழுங்க முயன்றது தெரிந்திருந்தும், கள்வன் என்று சொல்லலாமா? அது போகட்டும்; கண்வழிப் புகுந்தவன் கள்வனாகவே இருக்கட்டும். மேலே என்ன ஆனான்?

குமரகுருபரர் இந்த இரண்டு கருத்துக்களையும் இணைத்து "கண் புகுந்து என் கருத்து விருக்கவும்" என்றார். கருத்தின் கதைத் தொடர்ச்சியின் அழகு இது. உள்ளே சென்றான்; தங்கி விட்டான். உள் புகுந்த கள்வன் உள்ளேயே தங்கினான் என்றால், யாரோ வீட்டுக்காரர் உதவியில்லாமலா தங்கியிருக்க முடியும்?

ஆனால் வீட்டுக்காரர் நன்மைக்கு உதவியுமிருக்கலாம்; தீங்கு செய்யக் கதவை அடைத்தும் இருக்கலாம்.

அந்தச் சந்தேகம் எழாமல் தடுக்க துளஸி, கருத்துத் தொடரையே வேறு இடத்திலிருந்து இயக்கி விடுகிறார்.

லோசன மகு ராமஹிம் உ.ர ஆனி
தின்ஹே பலக கபாட சயானி!

கண்வழி இராமனைக் கருத்துள் இட்டுவந்து, கெட்டிக்காரி இமைக் கதவை அடைத்தாள். தங்கி விட்டான் கள்வன்! கதவுதிறந்து அழைத்தது அவள், உள்ளேவைத்துக் கதவை அடைத்ததும் அவள்; கள்வன் என்று நாமம் சூட்டுவதும் அவளே! போகட்டும் கருத்து எப்படி எல்லாம் உருவத்தையும் இடத்தையும் மாற்றிப் பரிமளம் பெறுகிறது பாருங்கள்!

அழகு பெற்ற அணியும், அழகுக்கு அழகும்

கவிகளுக்குத் தலைவிகளை வருணிப்பது ஒரு இனிய தொழில்; கொஞ்சம் சிரமமானதும் கூட. சீதையின் அழகை எழுத்தில் வடிக்கக் கச்சைகட்டிக்கொண்டு புறப்படுகின்றனர், இரண்டு கவிகளும் கம்பரின் சில முயற்சிகளைக் காணலாம்.

தரும்தான் என்றால் நான்முகன் இன்னம் தராமே

(மி. கா. படலம் 26)

என்ற கம்பர் பிரஹ்மாவின் சக்தி போதாது என்று புனைந்தார். மங்கையருக்கிடையே கண்ட, சீதையை, "சதகோடி மின் சேவிக்கும் மின்னரசு" (மி. கா. 31) என்று சொல்லி ஆறுத ஆவலை ஒருவாறு ஆற்றிக்கொண்டார். அலங்காரம் செய்யப்பட்ட சீதையை நோக்கிய கவி "அழகெனும் அணியும் ஓர் அழகு பெற்றதே!" (மி. கா. 34) என்று திகைத்தார். மீண்டும் கோலங்காட்டத் தோழியரால் அணி பூட்டப் பெறும் சீதையின் கோலத்தைக் கண்டு, "அமிழ்தினைச் சுவை செய் தன்ன அழகினுக்கு அழகு செய்தார்" என்று அங்கலாய்த்தார் அவர்.

சீதையின் அழகுக்கெதிரே உலகமே தோற்றுவிட்டது. கவியின் கற்பனையும் அறிவும், அந்த ஒளியின் முன்னே மழுங்குவதற்குக் கேட்பானேன்? அறிவு வறுமைகூர்கிறது. வாரி எடுக்கப் பாத்திரம் இருந்தால் தானே? ஓடும் அழகை ஓட்டைச்சொல்லாலா எடுக்க முடியும்?

துளஸியும் அதைத்தான் செய்கிறார். அவரும் தாண்டிப் பார்க்கிறார். சிறிய வீட்டில், நிறைந்த சாமான்களை, மனைவிவைத்த இடத்திலிருந்து மாற்றிமாற்றி வைத்து, வீட்டில் விசாலமாய் வழங்க இடம் ஏற்படுத்த முயலும் சர்க்கார் குமாஸ்தாவைப் போல்! பலன் என்னவோ அது தான்.

ஜநு விரஞ்சி ஸப் நிஜ நிபுனாயி
விரசி விசுவ கஹம் பிரகட திகாயி

பிரமன் தன் முழுத்திறமையையுமே ஓர் உருவாக சிருஷ்டித்து உலகத்துக்குக் காட்டினாற் போல்......இருந்தாளாம் சீதை.

கம்பர் பிரமனுக்குத் திறமை இல்லை என்று சொன்னார். அவருக்கு வெற்றி கிட்டவில்லை. துளஸி பிரமனின் திறமைக்கு ஒரு உருக்கொடுத்து உலகின்முன் நிறுத்திப் பார்க்கிறார்! 'சுந்தரதா கஹும் சுந்தர கரயி'' என்று. கம்பர் அணியின் அழகுக்கு அழகானாள் சீதை என்றார். அதனால்தான் அணிகள் பூட்டும் போது, அமுதத்துக்குச் சுவை செய்யும் முயற்சியாக அழகுக்கு அணிதந்து அழகு செய்வாரும் உண்டா? ஞாலம் ஏழைமையுடைத்து! என்று ஏங்கினார். துளஸி அழகுக்கே அழகு செய்தாள் சீதை என்று சொல்லிப் பார்க்கிறார்.

கம்பர், மிஃகள் சேவிக்கும் மின்னரசு என்றாரல்லவா? இவர், அழகின் வீட்டில் எரியும் தீபசிகை என்று சொல்லிப் பார்க்கிறார். கவிகள் தோற்றாலும், வாசகர்களுக்குச் சுவை விருந்து குறைவது இல்லை!

* சக்கரம்

திரு. பெ. நா. அப்புஸ்வாமி ஐயர் அவர்கள் B. A., B. L., சென்னை.

மிகப் பழங்காலத்தில் வாழ்ந்த நம் முன்னோர்கள் அனுபவிக்காத எத்தனையோ சௌகரியங்களை நாம் இக்காலத்திலே அனுபவிக்கிறோம். அவர்கள் உபயோகியாத எத்தனையோ கருவிகளை நாம் உபயோகிக்கிறோம். இதற்கு ஓர் உதாரணமாகச் சக்கரத்தைக் குறிப்பிடலாம்.

இதைக் கேட்டதும் உங்களுக்கு ஆச்சரியமாக இருக்கும். இதைப் பற்றிப் பல கேள்விகள் கேட்கவும் தோன்றும். சக்கரம் என்பது ஒரு கருவியா? சக்கரத்தினால் அப்படி நமக்கு என்ன சௌகரியங்கள் ஏற்பட்டுவிட்டன? முற்காலத்தில் வாழ்ந்தவர்களுக்குச் சக்கரம் என்பதே தெரியாதா? என்றெல்லாம் உங்களுக்குக் கேட்கத் தோன்றலாம்.

மிகப் பழங்காலத்திலே இவ்வுலகம் எங்கும் காடும், வனமும், வனாந்தரமுமாக இருந்தது. அவைகளிலே கொடிய மிருகங்கள் பல வாழ்ந்தன. அவைகளுக்கு இடையே அஞ்சி, ஒடுங்கி வாழ்ந்த அக்காலத்து மனிதர்களின் தொகையும் அதிகம் இல்லை. இங்கு சிலரும் அங்கு சிலருமாக, சிறு சிறு கூட்டங்களாக அவர்கள் வாழ்ந்து வந்தார்கள். அவர்கள் நம்மைக்காட்டிலும் உடல் வலிமையில் மிகுந்தவர்கள் என்றும், ஆனால் அறிவில் குறைந்தவர்கள் என்றும் பொதுப்படக் கூறலாம். அக்காலத்தில் அவர்களுக்குக் குண்டாந்தடி, ஈட்டி போன்ற இரண்டொரு கருவிகளைத் தவிர மற்றக் கருவிகளே கிடையா. அவைகளை இயற்றவோ, உபயோகிக்கவோ அவர்களுக்குத் தெரியாது. தாங்கள் அபாயகரமாய் அரும்பாடுபட்டு வேட்டையாடிக் கொன்ற சில பிராணிகளை முயன்று கரகரவென்று தரையில் இழுத்தோ, அல்லது தங்கள் தோளில் தூக்கிக் கஷ்டப்பட்டுச் சுமந்தோ, காலால் மெல்லமெல்லத்

---

*சென்னை அகில இந்திய வானொலி நிலையத்தினின்று 14—7—53-ல் ஒலிபரப்பியது. அ. நிலையத்தார் அனுமதியுடன் வெளியிடப்பெற்றது.

தள்ளாடி நடந்து தாம் வாழும் இடங்களுக்குக் கொணர்ந்தார்கள். தாங்கள் கொன்றவை பெரிய மிருகங்களாயிருந்தால் அவர்களால் எளிதாகத் தூக்கவும் முடியாது, நெடுந்தூரம் எடுத்துச் செல்லவும் முடியாது, மிக விரைவாக நடக்கவும் முடியாது.

இப்படியிருந்த நிலையிலே யாரோ ஒருவர், ஏதோவொரு நாட்டில், தாம் கொன்ற மிருகத்தை உருளைக் கட்டையின்மீது கிடத்தி உருட்டி இழுத்துச் செல்வது எளிதாகிறது என்பதைத் தற்செயலாகக் கண்டு பிடித்தார். இடுப்பொடிய, கால்நோவ, கைகடுக்கச் சுமந்த சுமையை விளையாட்டுப்போல எளிதாக உருட்டித் தள்ளலாம் என்று தெரிந்த போது அவர் எவ்வளவு மகிழ்ச்சி அடைந்திருப்பார்! அவரோடு வாழ்ந்த சிறிய கூட்டத்தார் அவரை எவ்வளவு பாராட்டியிருப்பார்கள்! அவர் முதன்முதலாக உபயோகித்த அந்த உருளைக் கட்டையானது சில காலத்துக்குப் பிறகு சற்றே உருமாறி, சக்கரமாக அமைந்திருக்கவேண்டும். இப்படிப் பிறந்த சக்கரத்தின் தத்துவத்தை அக்காலத்து மனித சமுதாயம் முழுவதும் நாளடைவில் அறிந்து பயன்படுத்தக் கற்றுக் கொண்டிருக்கவேண்டும். இப்படி எங்கோ, எப்படியோ, தற்செயலாகத் தெரியவந்த சக்கரத்தின் தத்துவமானது சிறிது சிறிதாக விரிந்து பரவி இப்பொழுது உலகத்தையே சக்கரமாகச் சூழ்ந்துவிட்டது.

இனிமேல் சக்கரத்தின் உபயோகங்கள் சிலவற்றைக் கவனிப்போம்.

சக்கரம் என்னும் உருளைக்கட்டையானது முதன்முதலாகப் பளுவான பொருள்களைச் சுமந்து செல்வதற்கே பயன்பட்டது என்று சொன்னேன். பண்டை மனிதர் நாளடைவில் அறிவிற் சிறந்து நாகரிக வாழ்க்கை புரியத் தொடங்கியபோது மிகப் பெரிய பாரங்களையும் சுமந்து செல்ல இதைப் பலவகையாக உபயோகித்திருக்கவேண்டும். உதாரணமாக, காலத்துக்கும் அஞ்சாமல் நிமிர்ந்து நிற்கும் எகிப்து நாட்டிலுள்ள பிரமிட்டுகள் மிகப் பெருங்கற்களால் அமைந்தவை. அவற்றுள் ஒன்றாகிய பெரிய பிரமிடு என்பது பல ஆயிரம் வருஷங்களுக்கு முன்னால் கட்டப்பட்டது. அதில் இருபத்துமூன்றுலக்ஷம் பெருங்கற்கள் இருக்கின்றன என்றும், அவற்றுள் ஒவ்வொன்றும் இரண்டரை டன் எடை

யுள்ளது என்றும் கணக்கிட்டிருக்கிறார்கள். இந்தக் கற்களையெல்லாம் உருளைகளின் உதவியாலேயே நெடுந்தூரத்திலிருந்து கொணர்ந்திருக்க வேண்டும். அவைகளை உயர ஏற்றிப் பொருத்திக் கட்டியிருக்கவேண்டும். இவைகளுக்கு வெகு காலத்திற்குப் பிறகு நமது நாட்டிலுள்ள பெருங் கோயில்களைக் கட்டும்போது அவற்றுக்கு வேண்டியிருந்த கல்-தூண்களை யும், கல்-உத்தரங்களையும் கோபுரத்தில் உயரப் பொருத்திக் கட்டுவதற் கான பெரிய கற்களையும் உருளைகளின் உதவியாலேயே நெடுந்தூரத்தி லிருந்து உருட்டிக் கொணர்ந்து அவைகளில் அமைத்திருக்கவேண்டும்.

சக்கரத்தின் இரண்டாவது பயனும் இதை ஒட்டிப் பிறந்தது. உருளைக் கட்டையானது நாளடைவில் உருமாறி, உயர்ந்து, பெரிதாகி, அகலம் குறைந்து, அச்சும் ஆரமும் வளையக்கட்டையும் பட்டையும் பெற்று, வண்டிச்சக்கரமாக வடிவெடுத்திருக்கவேண்டும். இக்காலத்திலே நாம் எத்தனையோ விதமான சக்கரங்களைப் பார்க்கிறோம். தாங்கள் செய்யவேண்டிய தொழிலுக்கு ஏற்றபடி இவைகளெல்லாம் வகைவகை யாக அமைந்திருக்கின்றன. கோயில்-தேர், பாரம் தூக்கும் கட்டை வண்டி, விர் என்று ஓடும் சைக்கிள், விரைந்து செல்லும் மோட்டார்கார், பஸ், ரயில் முதலிய பற்பல வகையான வண்டிகள் ஆகியவற்றின் சக்க ரங்கள் ஒன்றுக்கொன்று எவ்வளவு வித்தியாசப்படுகின்றன!

சக்கரத்தின் மற்றொரு உபயோகம் விவசாயத்தை ஒட்டியது. மிகப் பழங்காலத்திலேயே சக்கரமானது தண்ணீர் இறைக்கப் பயன்பட் டிருக்கவேண்டும். ஓர் அச்சில் மேலும் கீழும் ஆடும்படி அமைந்த துலா என்னும் கருவியால் தண்ணீர் இறைப்பதைவிட உருளையில் ஓடும் கயிற்றினால் தண்ணீரை இறைப்பது எளிது என்று யாரோ ஒரு வருக்குத் தோன்றியிருக்கவேண்டும். இக்காலத்திலும் நமது நாட்டில் கிணற்றின் இராட்டினமும் கமலையின் உருளையும் சக்கரமும் தண்ணீர் இறைக்கப் பயன்படுவதை நாம் எல்லோரும் அறிவோம். தண்ணீரால் இயங்கும் தடுப்புச் சக்கரம் இதன் பின்பு அமைக்கப் பட்டிருக்கவேண் டும். ஆற்றில் ஓடும் நீரால் இந்தச் சக்கரத்தின் தடுப்புக்கள் தள்ளப் படுவதால் சக்கரம் சுழலுகிறது. அதன் சுழற்சியால் ஆற்று நீரை இறைத்துக் குளங்களை நிரப்பியிருக்கவேண்டும்; வயல்களுக்கும் பாய்ச்சி யிருக்கவேண்டும்.

நீரினால் இயங்கிய இந்தத் துடுப்புச் சக்கரத்தின் விளைவுகளாக மாவரைக்கும் மில்களும், மரம் அறுக்கும் எந்திரங்களும், வேறுவகையான எந்திரங்களும் எந்திரசாலைகளும் பிற்காலத்தில் தோன்றித் தொழில்புரிந்தன இந்தச் சந்தர்ப்பத்தில் ஒரு ரசமான விஷயத்தைக் குறிப்பிடலாம். ஹாலந்து நாட்டில் பல இடங்கள் கடல் மட்டத்தை விடச் சற்றே தாழ்ந்தவை. கடலில் புயல் தோன்றும்போதெல்லாம் அலைகள் கிளம்பி நாட்டைப் படையெடுத்து ஊர்களையும், உப்பு நீரால் பயிரையும், நாட்டின் வளத்தையும் அழித்துவந்தன. இந்தத் தீய காரியத்தில் காற்றும் நீரும் ஒன்றுக்கொன்று துணைசெய்தன. அந்நாட்டு மனிதர் கட்டிய அணைகளை அழித்துவந்தன. ஆகையால் அந்நாட்டினரின் புத்தியில் ஓர் அரிய ஆலோசனை தோன்றிற்று. ஒன்றுக்கொன்று துணையாயிருந்து தங்களுக்குச் சேதம் விளைத்த இரண்டையும் ஒன்றோடொன்று போராடவிடலாம் என்று அவர்களுக்குத் தோன்றிற்று. பெரிய காற்றாலைகளை அமைத்து அவைகளைக்கொண்டு கடல் நீரை இறைத்து, மீண்டும் கடலில் செலுத்தி, நாட்டைப் பாதுகாத்தார்கள். அவர்கள் காற்றைக்கொண்டே கடலை வென்றார்கள். மேலும், இவ்வகையான காற்றாலைகளை மாவரைக்கவும் வேறு வகையான எந்திரங்களைச் சுழலச் செய்யவும் அந்நாட்டினர் பயன்படுத்தினார்கள். அந்நாட்டைப் பற்றிய படங்களிலெல்லாம் மிகப்பெரிய நாலுகைப்பூதம்போல் இவை எங்கும் உயரமாய் நிற்கக் காணலாம். ஆனால், துணைசெய்யும் அன்பு நிறைந்த பூதங்கள்! தண்ணீரின் வீழ்ச்சியால் சுழற்றப்படும் டர்பைன் என்னும் சுழல்-சக்கரமானது இக்காலத்தில் மின்சார உற்பத்தியின் முக்கிய கருவியாக இருக்கிறது என்பது உங்களுக்குத் தெரியும். இதுவும் சக்கரம்தான் அல்லவா ?

இந்த முயற்சிக்கு மறுதலையாக, துடுப்புச்சக்கரத்தை எந்திரசக்தியால் சுழலச் செய்து படகுகளையும் சிறு கப்பல்களையும் முதன்முதலாக ஓட்டினார்கள்.

மிகப் பழங்காலத்திலே சக்கரமானது மக்கட்சமுதாயத்துக்கு மிகவும் முக்கியமான வேறு இரண்டு துறைகளிலும் பயன்படத்தொடங்கியது. ஒன்று, குயவரின் சக்கரம்; இது கிடைப்போக்கில் சுழல்வது. எக்காலத்திலே எங்கு ஆதிமனிதர்கள் மண்ணினால் பாண்ட வனையக் கற்

றுக்கொண்டார்கள் என்பது தெரியவில்லை. அதுபோலவே பானைவனைவதற்குச் சக்கரத்தை அவர்கள் முதன்முதலில் எங்கே பயன்படுத்தினார்கள் என்பதும் தெரியவில்லை. இன்றும் பானை முதலியவைகளை இயற்றும் தொழிலிலே சக்கரமே அடிப்படைக் கருவியாக இருந்து வருகிறது.

சுழலும் சக்கரம் மக்கட் சமுதாயத்துக்குப் பயன்பட்ட மற்றொரு துறை, நூலை நூற்றல் என்பது. அநாதிகாலமாகப் பருத்தி முதலியவற்றிலிருந்து எல்லா நாடுகளிலும் நூலை நூற்கும் முக்கிய கருவியை, நாம் இப்பொழுது தக்ளி என்று சொல்லுகிறோம். இதன் அடியாகப் பிறந்ததே சர்க்கா என்னும் எளிய எந்திரக்கருவி.

சக்கரத்தின் தத்துவமானது உருளையும் இருசும் என்னும் எந்திர ஏற்பாட்டில் நமக்கு மிகவும் துணைசெய்கிறது. சக்கரத்தின் விளிம்போரத்தில் குறைவான திறனைச் செலுத்தினால் சக்கரத்தின் அச்சிலே அழுத்தும் பெரிய பளுவையும் நாம் எளிதில் ஈடு செய்யலாம். இது ஓர் அற்புதமான விளைவு, அல்லவா? இதுவும் இதற்கு மறுதலையான தத்துவமும் நாம் சாதாரணமாக உபயோகிக்கும் பல கருவிகளில் பயன்படக் காண்கிறோம். சைக்கிளின் பெடலும் கிராங்கும், தயிரைக் கடையும் மத்து, கப்பலின் நங்கூரம்-தூக்கி முதலியவை இதைச் சேர்ந்தவை. கப்பிகள் என்னும் சக்கரங்களை அடுக்கும் முறையாலும் சிரமமான வேலையை எளிதாகச் செய்ய முடிகிறது. கிரேன் என்னும் பாரம்-தூக்கி இந்தத் தத்துவத்தையே அடிப்படையாகக் கொண்டது. சக்கரம் எத்தனைவகையாக, எத்தனை பேர்களுக்குப் பயன்படுகிறது! சிறுவர்கள் அதை உருட்டி மகிழ்கிறார்கள். தொழிலாளர்கள் அதைப் பயன்படுத்தித் தங்களுடைய வாழ்க்கையை நடத்துகிறார்கள். அரசியல் வாதிகள் அதை சுதந்திரப் போராட்டத்தின் அறிகுறியாகக் கொண்டாடுகிறார்கள். ஆட்சிபுரிபவர்கள் அதை அரசனுடைய ஆணைக்கு அறிகுறியாக பாவிக்கிறார்கள். நமது நாட்டின் மணிக் கொடியிலே அதற்குச் சிறப்பான இடத்தையும் அளித்திருக்கிறார்கள். தர்மத்தை நிலைநாட்டி, அதர்மத்தை அழிக்கும் தெய்வத்தின்

கரத்திலுள்ள அற்புத ஆயுதமாக நமது நாட்டினர் பலர் அதை வணங்குகிறார்கள்.

சக்கரம் என்பது ஒரு கருவி. அது நெம்புகோலின் தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டது. சிறிய முயற்சியைப் பெரிய விளைவாக்கும் அற்புத எந்திரம். இயக்கத்தைத் தடைசெய்யும் உராய்வைப் பெரும்பான்மையும் குறைத்து உதவும் உபகாரி. இதன் ஆச்சரியமான தத்துவத்தை இக்காலத்தில் வாழும் நாம் எளிதாகத் தெரிந்துகொள்கிறோம்; நன்றாக உணர்கிறோம்; மேன்மேலும் பயன்படுத்துகிறோம். ஆனால், சற்றே நினைத்துப்பார்த்தால், இதைக் கண்டுபிடிக்க, எவ்வளவு காலம் ஆகியிருக்கும் என்பது தெரியும். அதன் பொருட்டு நமது முன்னோர்கள் எத்தனை பாடு பட்டிருப்பார்கள்! இதைப் படிப்படியாக வளர்ப்பதற்கும், ஒவ்வொன்றாக இதன் உபயோகங்களை அறிந்துகொள்வதற்கும் எவ்வளவு காலம் முயன்றிருப்பார்கள்? தவம் கிடந்திருப்பார்கள் என்றுகூடச் சொல்லலாம்! எத்தனை தடவைகளில் வெற்றி கிடைத்தபோது அவர்களுடைய மனத்திலே எத்தகைய ஆறுதலும் மகிழ்ச்சியும் தோன்றியிருக்கும்!

இடைவிடாது முயன்று எத்தனையோ தோல்விகளாலும் தளர்ச்சியடையாமல் தாங்கள் மேற்கொண்ட முயற்சியை நெகிழவிடாமல், தங்களுடைய அறிவை மேன்மேலும் திரட்டி, பிரபஞ்சத்தின் அடிப்படையான விஞ்ஞான விதிகளை வகுத்தும் ஒழுங்குபடுத்தியும் வெளியிட்ட பேரறிஞர்களை நாம் மனமார வாழ்த்தக் கடமைப்பட்டுள்ளோம்.

சக்கரத்தை முதன்முதலில் கண்டுபிடித்தவர் யார்? அதைப் பயன்படுத்தியவர் யார்? அவர் எந்த நாட்டினர்? எந்தக் காலத்தினர்? அவர் ஆணா பெண்ணா? இவற்றைப்பற்றி ஒன்றுமே நமக்குத் தெரியாது. ஆதிக் காலத்திலே வாழ்ந்த யாரோ ஒருவர் எவ்வாறோ, எங்கோ, அரும்பாடுபட்டோ, தற்செயலாகவோ, சக்கரத்தைக் கண்டுபிடித்தார். அவர் யார் என்று நமக்கு இனித் தெரிய வழியும் இல்லை. ஆனால் அவர் யாரே ஆயினும், நாம அனைவரும் அவரைப் போற்றிவாழ்த்துவோமாக.

ஸ்ரீ:

மதிப்புரை

1. சிவஞானபோதம் (பழையவுரை):—[திருவாவடுதுறையாதீன வெளியீடு-54, பதிப்பாசிரியர்: ஷை ஆதீன வித்துவான் சித்தாந்த சைவமணி திரு. த. ச. மீனாக்ஷிசுந்தரம்பிள்ளையவர்கள். விலை: குறிக்கப்பெறவில்லை. விலாசம்: லைபிரேரியன், சரஸ்வதிமஹால் புத்தகசாலை, திருவாவடுதுறையாதீனம், நரசிங்கன்பேட்டை, S. I.]

ஸ்ரீ மெய்கண்டதேவநாயனார் அருளிய சித்தாந்த சாத்திரமான சிவஞானபோதத்தின் பெருமை யாவரும் அறிவர். அதற்கு ஆன்றோர் உரைகள் அநேகம் உள. அவற்றுள் இது திருவாவடுதுறையாதீனத்துப் பெரியோர் ஒருவர் செய்தருளினது. முந்நூறாண்டுகட்கு முந்தின பழமைவாய்ந்தது; இதுவரை அச்சில் வெளிவாராதது; பெரிதும் வடமொழி விரவாதது; தெளிவான செந்தமிழ் நடையில் அமைந்தது; எளிமையும் இனிமையும் வாய்ந்து பயில்வோர்க்கு மிகவும் பயன்படுவது; சூத்திரப்பொருளை ஒன்றற்கொன்று தொடர்புகாட்டி நன்கு விளக்கிச்செல்வது. சில விகற்பவகை உரைகளை விவரிக்கும் பகுதிகளும் இதில் உள்ளன. சூத்திரமூலபாட வேறுபாடுகளும் சிலவுள. அதிகரணம் என வழங்கும் பெயர்கள் இதில் சூரணி என வழங்குகின்றன. மற்றும் இதன் உரைநுட்பங்கள் ஆராய்வாளர்க்கு மதிநலம் மிகுப்பன.

2. திருஞானசாகரம்:—[இதுவும் ஷை ஆதீனவெளியீடு-56. பதிப்பாசிரியர்: ஷை ஆதீனவித்துவான் அவர்களே. விலையும் விலாசமும் மேற்காட்டியனவே].

இந்நூல் தன் பெயருக்கேற்ப உயர்ந்த சிவஞான உண்மைகளை வரைவின்றி வழங்குவது. மிகவும் எளிய இனிய நூறு வெண்பாக்களால் இயன்றது. உரையின் உதவிவேண்டாமலே சித்தாந்த சைவ அரும்பொருளை யாவரும் உணரச்செய்வது. இவ்வரிய நூலை ஆக்கியளித்த ஆசிரியப் பெருந்தகையின் வரலாறு ஒன்றும் அறிய இயலாமலிருப்பது ஒரு குறையேயாகும்.

3. இருபாவிருபது:—[இதுவும் ஷை ஆதீனவெளியீடு—57. பதிப்பாசிரியர்: ஷை வித்துவான் அவர்களே. விலையும் விலாசமும்; மேற்காட்டியனவே].

இது ஸ்ரீ அருணந்தி தேவநாயனார் அருளிச்செய்த பெருமையுடையது; சிவஞான சித்தியார் என்னும் அரிய ஞானநூலின் ஆசிரியரான அப்பெரியார் இயற்றிய பத்து வெண்பாக்களும் பத்து ஆசிரியப்பாக்களும் கொண்டது. மெய்கண்ட சாத்திரம் பதினான்கனுள் ஒன்றாய் விளங்குவது. இந்நூல்

பாசலக்ஷணத்தைப் பகுத்துக் கடாவிடைகளால் நன்கு தெளிவிப்பதாகும். இதற்கு ஷை திருவாவடுதுறையாதீனத்து ஸ்ரீநமச்சிவாயத்தம்பிரான் சுவாமிகள் இயற்றியவுரையோடு இப்புத்தகம் மிகச் செவ்விய முறையில் பதிப்பிக்கப் பெற்றுள்ளது.

4. துகளறுபோதம்:—[இதுவும் ஷை ஆதீனவெளியீடு-58. பதிப்பாசிரியர்: ஷை ஆதீனவித்துவான் அவர்களே. விலையும் விலாசமும், மேற்காட்டியனவே.]

இது சீர்காழிச் சிற்றம்பல நாடிகள் இயற்றியருளியது; காப்புச் செய்யுளோடு, நூற்றொரு வெண்பாக்களுடையது; எளிய இனிய ஆற்றொழுக்கான நடையினது. ஆணவமலத்தை அறுத்து, சிவஞானபோதம் அளிக்கவல்லது. சிறந்த பிரமாண நூலாக ஸ்ரீ சிவஞானயோகிகளால் மேற்கொள்ளப்பட்டது. திருவாவடுதுறை யாதீனத்துப் பெரியார் ஒருவர் எழுதிய பழைய பொழிப்புரையுடன், யாவர்க்கும் உதவுமாறு, இஃது இப்பொழுது அச்சிடப்பட்டுள்ளது.

5. கந்தபுராணதத்துவம்:—[இதுவும் ஷை ஆதீன வெளியீடு-59. ஆசிரியர்: ஷை ஆதீனவித்துவான் திரு. த. ச. மீனாக்ஷிசுந்தரம்பிள்ளையவர்களே; விலையும் விலாசமும், முன்னையனவே].

இச்சிறுபுத்தகம் கந்தபுராண வரலாற்றுட் பொதிந்து கிடக்கும் சில மெய்ப்பொருள்களைத் தெளிவான தமிழ்நடையில் விவரிக்கின்றது.

6. திருவெம்பாவை:—[இதுவும் ஷை ஆதீன வெளியீடு-61. பதிப்பாசிரியர்: ஷை ஆதீனவித்துவான் அவர்களே. புத்தகம் வேண்டுவோர் ஷை ஆதீனம் லைபரேரியன் அவர்களுக்கு 3-அணா தபால்-தலை அனுப்பிப்பெற்றுக் கொள்ளலாம்.]

ஸ்ரீமணிவாசகப்பெருமான் அருளிச்செய்த இத் தெய்வப்பனுவலுக்குப் பதிப்பாசிரியர் எழுதிய முகவுரை பதவுரை பொழிப்புரைகள் மிகச்சுருக்கமும் தெளிவும் வாய்ந்து திகழ்வன. இப்புத்தகம் அன்பர்கள் யாவர்க்கும் அளவிறந்த பயன் அளிக்க வல்லது.

7. திருவெம்பாவைக் கருத்து முதலியன:—[இதுவும் ஷை ஆதீனவெளியீடு-63. ஆசிரியர்: ஷை ஆதீனவித்துவான் அவர்களே. புத்தகம் வேண்டுவோர், ஷை ஆதீன லைபரேரியன் அவர்களுக்கு 3-அணா தபால்-தலை அனுப்பிப் பெறலாம்.]

திருவெம்பாவையைக் குறித்தும் அதன் தொடர்பான பிறவற்றைக் குறித்தும் சில அரியகருத்துக்களை யாவரும் உணருமாறு, இது தெளிவாக வெளியிடுகின்றது.

8. சிவப்பிரகாசம் (மூலமும் உரையும்):—[இதுவும் ஷை ஆதீன வெளியீடு—65. பதிப்பாசிரியர்: ஷை ஆதீனவித்துவான் அவர்களே. விலை குறிக்கப் பெறவில்லை. விலாசம்: லைபரேரியன் திருவாவடுதுறையாதீனம், நரசிங்கன்பேட்டை. S. I.]

சிவஞானத்தைப் பிரகாசிப்பதாகிய இந்நூல் மெய்கண்ட சாத்திரங்களில் ஒன்று. இந்நூலாசிரியர் ஸ்ரீஉமாபதிதேவநாயனுர். ஸ்ரீ மாதவச்சிவஞான யோகிகள் மாணுக்கர், இலக்கணம்-ஸ்ரீ சிதம்பரநாத முனிவர் இயற்றிய உரையுடன் இப்புத்தகம் அச்சிடப்பெற்றுள்ளது. இவ்வுரை மூலபாடங்களைச் செவ்வைசெய்து பதவுரையும் இலக்கணக் குறிப்பும் எழுதிச் செல்கின்றது இப்பதிப்பில் இந்நூலின் பொருட்சுருக்கமும் செய்யுள் முதற் குறிப்பகராதியும் சேர்க்கப்பட்டுள்ளன.

9. திருஞானசம்பந்தர்பிள்ளைத்தமிழ் ஆராய்ச்சிக்குறிப்பு:— [இதுவும் ஷை ஆதீன வெளியீடு 66. ஆசிரியர்: கவிராஜபண்டிதர், ஸ்ரீ. நா. கனகராஜஐயரவர்கள் M. A, M. E. S. புத்தகம் வேண்டுவோர், ஷை ஆதீனம் லைபரேரியன் அவர்களுக்கு 3அணுத் தபால்-தலை அனுப்பிப்பெறலாம்.]

இப்பிள்ளைத்தமிழ் இவ்வாதீனத்து எட்டாவது பட்டத்தில் எழுந்தருளியிருந்த ஸ்ரீமாசிலாமணிதேசிகர் திருவாய்மலர்ந்தது. இதன் மூலம் மட்டும் முன்னரே அச்சிடப்பெற்றது; இவ்வாராய்ச்சிக் குறிப்பு இப்போது தனிப் புத்தகமாக வெளிவந்துளது. இக்குறிப்புரையாசிரியர் வரன்முறையான் வந்த தமிழறிவுசான்ற பெருநாவலர். இவர்கள் எழுதிய இவ்வாராய்ச்சி, இப்பிரபந்தத்தின் தனிச்சிறப்பான இயல்புகள் அனைத்தையும், தடைவிடைகள் காட்டி நன்குவிளக்க நிலைபெறுத்துகின்றது.

மேலே குறித்த திருவாடுதுறையாதீன வெளியீடான இப்புத்தகங்களெல்லாம் மிக்கபொருட்செலவில் அழகாகவும் திருத்தமாகவும் அச்சிடப்பட்டு விளங்குகின்றன. இவற்றைச் செவ்வனம் ஆராய்ந்து பரிசோதித்த சித்தாந்த சைவமணி திரு. த. ச. மீனுக்ஷிசுந்தரம் பிள்ளையவர்களின் தமிழ்ப் புலமையும் சாத்திரஞானமும் பலர்க்கும் நல்ல பயனைத் தருவனவாம். திருக்கைலாயபரம்பரைத் திருவாவடுதுறையாதீனத்து 21வது குருமகா சந்நிதானமாக எழுந்தருளியுள்ள ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய பரமாசாரிய சுவாமிகள் இங்ஙனம் செய்தருளுகின்றது சைவத்தமிழ்ப் பரிபாலனத் திருப்பணிகள் என்றும் மாறாது நின்று உலகத்தை உய்விக்குமாறு இறைவன் திருவருள் புரியவேண்டும்.